**செ. கு. எண்**: 071 **நாள்**: 26.04.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 26.4.2014

28.2.2014 அன்று சென்னை, பழைய மகாபலிபுரம் சாலையில் மிதி வண்டியில் பயணம் செய்த கோட்டூர் பகுதியைச் சேர்ந்த திரு. பொன்னுசாமி என்பவரின் மகன் சண்முகராஜ்;

1.3.2014 அன்று ஈரோடு நகரம், அகில்மேடு பிரதான சாலையில் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த புதூர் பகுதியைச் சேர்ந்த திரு. சுகுமார் என்பவரின் மகன் பாபுமோன்;

3.3.2014 அன்று சென்னை, கோபாலபுரம் அருகே இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த ராயப்பேட்டையைச் சேர்ந்த திரு. பத்மநாபன் என்பவரின் மகன் பன்னீர்செல்வம், திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் ஸ்ரீதர்;

8.3.2014 அன்று கடலூர் மாவட்டம், விருதாச்சலம் வட்டம், விளாங்காட்டூர் கிராமம், விருத்தாசலம் – சேலம் நெடுஞ்சாலை அருகே காரில் பயணம் செய்த குறிஞ்சிப்பாடி வட்டம், வடலூர் தென்குத்து கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் என்பவரின் மகன் சங்கர்;

9.3.2014 அன்று கரூர் நகரம், கரூர் – பாளையம் நெடுஞ்சாலையில் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த ஆண்டாங்கோவில் கீழ்பாகம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சிவலிங்கம் என்பவரின் மகன் சரவணக்குமார்; திரு. கருப்பண்ணன் என்பவரின் மகன் காளியப்பன்;

-- ஆகியோர் அரசுப் பேருந்துகள் மோதியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், ஆச்சாங்குட்டப்பட்டி கிராமம், அரூர் – சேலம் அருகே 4.3.2014 அன்று அரசுப் பேருந்து நிலை தடுமாறி சாலையோர புளிய மரத்தின் மீது மோதியதில், பேருந்தில் பயணம் செய்த தர்மபுரி மாவட்டம், கடத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்லமுத்து என்பவரின் மகன் சாம்ராஜ், துறிஞ்சிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ரவி என்பவரின் மனைவி விஜயலஷ்மி, ராமியம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்லப்பன் என்பவரின் மனைவி மயில் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், ராமையன்பட்டி கிராமம் அருகே 7.3.2014 அன்று திருவில்லிப்புத்தூரிலிருந்து திருநெல்வேலி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தும், திருநெல்வேலியிலிருந்து ராஜபாளையம் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து மோதிக் கொண்டதில் பேருந்தில் பயணம் செய்த மானூர் குறுவட்டம், மேலப்பிள்ளையார்குளத்தைச் சேர்ந்த செல்வி மீனா என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**